මගේ අංකය
எனது இல.
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No .

දිනය
திகதி
Date.

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

# அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் விடுக்கும் வேண்டுகோள்

1996 ஆம் அண்டின் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டத்தினூடாக நிறுவப்பட்டு இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 19 ஆவது சட்டத் திருத்தத்தின் ஊடாக இலங்கை அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது நாட்டில் வாழும் அனைவரதும் மனித உரிமைகளை உறுதிப்பஷடத்தப்படும் மனித உரிமைகள் கலாசாரமொன்றை நாட்டில் ஏற்படுத்தும் நோக்கில் செயற்படுகின்றது.

1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2020 ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்துகொள்வதற்கான தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க, இலங்கை தேர்தல் ஆணைக்குழு இந்தத் தேர்தலை நடாத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அதற்கிணங்க, இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் 104 ஆ (5) (ஆ) உறுப்புரையின் கீழான ஊடக வழிகாட்டு நெறிகள் 2020.06.03 ஆம் திகதிய, 2178/24 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி ஊடாக இலங்கை தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஊடக வழிகாட்டு நெறிகளுக்கமைய அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் இந்த ஊடக வழிகாட்டு நெறிகளுக்கு கட்டுப்பட்டு, அந்த ஊடக வழிகாட்டு நெறிகளுக்கமைய செயற்படுவதனை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். இந்த வழிகாட்டு நெறிகளைப் பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ளுதலானது சமூக வலைதள உரிமையாளர்கள், சமூக வலைதளங்களின் நிர்வாகிகள், கம்பிவட (கேபிள்) தொலைக்காட்சி உரிமையாளர்கள் ஆகியோரினதும் பொறுப்பாகுமெனவும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இந்த ஊடக வழிகாட்டு நெறிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள இலக்கம் 24 மற்றும் 25 ஆகிய வழிகாட்டு நெறிகள் மீது தங்களது கவனத்தை ஈர்க்கச் செய்கின்றோம். அதாவது;

“24. அனைத்து ஊடக நிறுவனங்களும் மத நம்பிக்கைகள், சமய பின்பற்றுதல்கள், பேச்சு மொழி, இனம், பழக்கவழக்கங்கள், குலம் கோத்திரங்கள் உட்பட்ட பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இலங்கை மக்களிடையே வெறுப்பூட்டும், பொறுமையிழக்கச் செய்யும் அல்லது பொறுமையிழக்கச் செய்யப்படும் வகையிலான பிரச்சார நடவடிக்கைகளை ஒலி / ஒளி பரப்புதல், பிரச்சாரம் செய்தல் அல்லது பிரசுரிப்பதனை தவிர்த்தல் வேண்டும்.

ප්‍රධාන කාර්යාලය / தலைமைக் காரியாலயம் / Head Office: 14, ආර්. ඒ. ද. මෙල් මාවත, කොළඹ - 04. / 14, ஆர்.ஏ.த.மெல் மாவத்தை, கொழும்பு-04. / 14, R.A.De Mel Mawatha, Colombo - 04.
දුරකථන / தொலைபேசி / Telephone: 94-11- 2505580/81/82
සභාපති / தவிசாளர் / Chairperson: 011-2505451
ලේකම් / செயலாளர் / Secretary: 011-2505521
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 2505541/74
ක්ෂණික / துரித அழைப்பு / Hotline: 011-2505575 1996
විද්‍යුත් තැපැල / மின்னஞ்சல் / E-mail: sechrcsl@gmail.com
වෙබ් / இணையம் / Web: www.hrcsl.lk

25. அனைத்து ஊடக நிறுவனங்களும் சமூகத்தில் அல்லது அரசியல் செயற்பாட்டாளர்களிடையே வெறுப்பூட்டும் அரசியலை ஊக்குவிக்கும் வகையிலான நடவடிக்கைகளை ஒலி / ஒளி பரப்புதல், பிரச்சாரம் செய்தல் அல்லது பிரசுரிப்பதனை தவிர்த்தல் வேண்டும்.''

**மூலம்: 2020 ஜுன் மாதம் 03 ஆம் திகதிய 2178/24 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி**

இலங்கையில் காணப்படும் வேறுபாடுகளை அடிப்படையாகக்கொண்டு இலங்கை மக்களிடையே வெறுப்பூட்டும் மற்றும் பொறுமையிழக்கச் செய்யும் அல்லது பொறுமையிழக்கச் செய்யப்படும் வகையிலான பிரச்சார நடவடிக்கைகளை ஒலி / ஒளி பரப்புதல், பிரச்சாரம் செய்தல் அல்லது பிரசுரிப்பதனை தவிர்த்தல் வேண்டுமென இதனூடாக வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், சமூகத்தில் அல்லது அரசியல் செயற்பாட்டாளர்களிடையே வெறுப்பூட்டும் அரசியலை ஊக்குவிக்கும் வகையிலான நடவடிக்கைகளை ஒலி / ஒளி பரப்புதல், பிரச்சாரம் செய்தல் அல்லது பிரசுரிப்பதனை தவிர்த்தல் வேண்டுமெனவும் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக நாட்டில் நிலவும் பன்முகத்தன்மையை (பல்வகைமை) அடிப்படையாகக்கொண்டு சமூகத்தில் பிளவை ஏற்படுத்தும் விதத்தில் நடவடிக்கை மேற்கொள்வதனூடாக ஒவ்வொரு குழுவும் ஏனைய குழு மீது வெறுப்பை ஏற்படுத்தும் விதத்தில் செயற்படும் வகையிலான நடவடிக்கைகளை தவிர்ந்துகொள்ளுமாறும் இதனூடாக வேண்டிக்கொள்ளப்பட்டுள்ளது.

பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் உயிரோட்டத்தை பாதுகாப்பதற்காக எவரும் விடுபடாத தேர்தலொன்றை நடாத்துதல் அத்தியாவசிய விடயமொன்றாகும். இங்கு, பொது மக்களுக்கு அரசியல் கட்சிகள் / சுயேச்சை குழுக்களின் கருத்துக்களை எடுத்துச்செல்லும்போது பிரதான ஊடகமாக வெகுசன ஊடகங்களுக்கு பாரிய பொறுப்பொன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது. இங்கு, நபர்களுக்கு தமது கருத்தை எடுத்துச்சென்றாலும் வாக்காளருக்கு தேர்தலில் தமது அரசியல் கருத்தை வாக்குச் சீட்டின் ஊடாக சுதந்திரமாகவும், நீதியாகவும் அழுத்தங்களின்றி வெளியிடும் வாய்ப்புக்கு வெகுசன ஊடகங்கள் இடையூறு விளைவிக்கக் கூடாது. இங்கு, நாட்டில் நிலவும் பன்முகத்தன்மைக்கு தீங்கு ஏற்படும் வகையில் சமூகத்தில் பிளவை ஏற்படுத்தும் விதத்தில் திரிபுபடுத்தப்பட்ட செய்திகள் மற்றும் விடயங்களை மிகைப்படுத்தி செய்திகளை வெளியிடுவதனைத் தவிர்ந்து நடத்தல் சம்பந்தமாக வெகுசன ஊடகங்களுக்கு மிகப் பாரிய பொறுப்பொன்று சாட்டப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, பிற்போக்கின்றிய ஊடக செயற்பாட்டின் ஊடாக தமது பாரிய பொறுப்பை நிறைவேற்றுவார்கள் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மிகவும் உயர்ந்த எதிர்பார்ப்பொன்றை இலங்கையின் ஊடகத்துறை மீது கொண்டுள்ளது. இது சம்பந்தமாக தங்களது முனைப்பானதும் நடுநிலையானதுமான தலையீட்டை முன்னேறிய ஜனநாயக மற்றும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் சமூகமொன்றைத் தோற்றுவிப்பதற்காக தங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

**கலாநிதி தீபிக்கா உடகம**
தவிசாளர்,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

2020 ஜுலை மாதம் 20 ஆம் திகதி